2017 ஜூலை 14]

நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

205—

பாதாள சாக்கடைத் திட்டம்

***4907—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக, கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும், மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய இயக்கத்தையும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழி நின்று, அம்மா அவர்கள் செயல்படுத்திய அத்தனை நலத் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.*

[2017 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதிக்குட்பட்ட, முசிறி பேரூராட்சி, முசிறி தொகுதியை தலைமையிடமாகக் கொண்டு அமைந்துள்ள பேரூராட்சியாகும். இப்பேரூராட்சி சுமார் 50,000 மக்கள்தொகை கொண்ட பேரூராட்சியாகும். இப்பேரூராட்சி காவேரிக் கரையோரமாக அமைந்துள்ள பேரூராட்சி. இப்பேரூராட்சியில் போதுமான சாக்கடை வசதிகள் இல்லை. ஆகவே, இப்பேரூராட்சிக்கு நடப்பாண்டிலேயே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்னுரிமை கொடுத்து, பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி பேரூராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 27,941 ஆகும். இந்தப் பேரூராட்சியின் மக்கள்தொகை மற்றும் வெளியேறும் கழிவுநீர் ஆகியவற்றின் அடிப்படையில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. அதன் அடிப்படையில், முதற்கட்டமாக, காஞ்சிபுரம் மாவட்டம், கருங்குழி பேரூராட்சியில் முன்னோடித் திட்டமாக, கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டத்தைச் (Septage Management) செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய திட்டத்தின் செயலாக்க முடிவின் அடிப்படையில், இந்தத் திட்டம் எவ்வளவு success ஆகிறது என்கிற சூழ்நிலை வந்தபின்னால், உரிய நிதியாதாரத்தைப் பெற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, முசிறி பேரூராட்சியில் கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.

2017 ஜூலை 14]

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முசிறி தொகுதிக்குட்பட்ட, முசிறி பேரூராட்சியின் அருகிலேயே என். புதுப்பட்டி என்ற கிராம ஊராட்சி இருந்து வருகிறது. அக்கிராம ஊராட்சி சுமார் 15,000 மக்கள்தொகை உள்ள கிராம ஊராட்சி. ஆகவே, முசிறி பேரூராட்சியோடு அக்கிராம ஊராட்சியை இணைத்து, இப்பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டது, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்றாலுங்கூட, அங்கிருக்கக்கூடிய தொகுதி மக்களுடைய கோரிக்கைகள் மற்றும் திட்டங்களை நிறைவேற்றுகின்ற விதமாக, மக்கள்மேல் இருக்கக்கூடிய அக்கறையில் கேட்டுள்ளார்கள். கண்டிப்பாக அந்த ஊராட்சியை இணைத்து, அதனுடைய வருவாய் மற்றும் மக்கள்தொகை ஆகியவற்றிற்கான* norms *எல்லாம் சரியாக இருக்கும்பட்சத்திலே, கண்டிப்பாக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலே 3 நகராட்சிகள் உள்ளன. (1) வாலாஜாபேட்டை (2) ராணிப்பேட்டை மற்றும் (3) மேல்விஷாரம். இந்த 3 நகராட்சி மக்களின் நீண்டநாளைய கோரிக்கை, பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட*

வேண்டும் என்பது. பொதுவாகவே, இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், வாலாஜாபேட்டை நகராட்சி தமிழ்நாட்டிலேயே முதல் நகராட்சி. அதனால் இந்த மூன்று நகராட்சிகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், 2006 முதல் 2011 வரையிலிருந்த கலைஞர் ஆட்சிக் காலத்தில் துணை முதலமைச்சராகவும், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரான எங்கள் அண்ணன் தளபதி அவர்களிடத்தில் நான் இதுபற்றி எடுத்துக் கூறி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தயாரான நிலையில் இருக்கும்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதனால், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. அதனால், ஒரேயொரு கோரிக்கையை இந்த அரசின் முன்வைக்க விரும்புகிறேன். திருப்பத்தூர் தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள் பேசும்போது, 'எங்கள் மாவட்டத்திலிருந்து இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள்' என்று சொன்னார். நிஜமாகவே எங்களுக்கு மிக்க சந்தோஷமாக இருக்கிறது. ** எங்கள் மாவட்டத்தில் 13 தொகுதிகள் இருக்கின்றன. ** (குறுக்கீடு) நான் என்றைக்கோ ஒரு நாள்தான் பேசுகிறேன். இதைக்கூட பேச அனுமதிக்கவில்லையென்றால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்தி, நீங்கள் எத்தனை நாட்கள் கழித்துப் பேசினாலும், கேள்வியைத்தான் கேட்கவேண்டும்.

திரு. ஆர். காந்தி: நல்ல முதலமைச்சர் வந்திருக்கிறார். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது போன்ற குற்றச்சாட்டுகளை கேள்வி நேரத்தில் சொல்லக் கூடாது. ஆனால், நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் தற்போது சொன்ன அத்தனை குற்றச்சாட்டுகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. உங்களை ஒரு கேள்வி கேட்கத்தான் அனுமதித்திருக்கிறேன். கேள்வியைக் கேளுங்கள். இல்லையென்றால், வேறோர் உறுப்பினரை நான் அழைக்கவேண்டியிருக்கும்.

திரு. ஆர். காந்தி: நான் கோரிக்கையைத்தான் முன்வைக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கைகளைத்தான் அனைத்து உறுப்பினர்களும் வைக்கிறார்கள். என்னிடத்தில் நேரம் இல்லையே?

திரு. ஆர். காந்தி: நல்ல முதலமைச்சர் வந்திருக்கிறார்கள். அவர்கள், ஆட்சிக் காலத்திலேயே இதனை இந்த அரசு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். தற்போது நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன. அதற்குள் இந்தத் திட்டத்தை அறிவித்து, நிறைவேற்றித் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது பேச்சை ஆரம்பிக்கும்போது நன்றாகத்தான் ஆரம்பித்தார்கள். கடைசியில் வேறு ஒரு மாதிரியான சூழ்நிலைக்கு கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். நேற்றைக்கு, அவர்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்கூட, ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, இரண்டு பேரும் ஒன்றாக இருந்தீர்கள். ** என்று சொல்கிறார். அந்தக் கருத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மாதிரியில்லாமல், ** என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலூர் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் சமீபத்தில்கூட பார்த்திருப்பார்கள். விதி 110—ன்கீழ் வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ரூ.343 கோடியே 69 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அறிவித்துள்ளார்கள். அதேபோல, மூன்று நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்கள், மாநகராட்சி, நகராட்சி மற்றும் உள்ளாட்சிப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

பகுதிகளிலெல்லாம் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கண்டிப்பாக படிப்படியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அறிவித்து, அதற்காக அதிகமான நிதியை ஒதுக்கியுள்ளார்கள். தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய கடந்த ஆட்சியிலும் நடந்த நிகழ்வுகளைக் குறிப்பிட்டார்கள். அதுகுறித்துகூட நான் சொல்லியிருக்கமாட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுகுறித்துக் குறிப்பிட்டதால், நான் அதற்கு பதில் சொல்லவேண்டியிருக்கிறது. 'அந்த காலத்தில் இந்த மூன்று நகராட்சிகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த ஆய்வு செய்தோம்' என்று சொன்னார்கள். மொத்தமாகப் பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஐந்து ஆண்டுகளில் 55 பாதாள சாக்கடைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, 20 திட்டங்கள் மட்டும்தான் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மீதமுள்ள 35 திட்டங்களில் 18 திட்டங்கள் நிருவாக அனுமதி வழங்கப்பட்ட நிலையிலும், 17 திட்டங்கள் அறிவிக்கப்பட்ட நிலையிலும் இருந்ததைக் கைவிட்டுவிட்டார்கள். அந்த 20 திட்டங்களிலும் பார்த்தால், பல்லாவரம் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் இங்கே இருக்கிறார். பல்லாவரத்தில் மட்டும்தான் பாதாள சாக்கடைத் திட்டத்தை முடித்தார்கள். மீதியுள்ள அனைத்து திட்டங்களும் எங்களுடைய அரசு ஆட்சிக்கு வந்தபிறகுதான் முடிக்கப்பட்டன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, படிப்படியாக திட்டங்கள் செயல்படுத்தப்படும். பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் முழுமையாக அதிகமாக எடுத்துக்கொள்ளப்பட்டன என்பதையும், அதிகமாக நிதியொதுக்கப்பட்டது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.

திரு. டி.எ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய தொண்டர்களுக்கெல்லாம் வாழ்வளித்து,

2017 ஜூலை 14]

மக்களைப் பெற்ற மகராசி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டு மக்களுக்கு தன் வாழ்வையே அர்ப்பணித்து வாழ்ந்த மனித தெய்வம். அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தற்போது பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. சொல்ல முடியாத அளவிற்கு ஏழையெளிய மக்களையெல்லாம் அரவணைத்து, ஒற்றுமைப்படுத்தி ஆட்சி செய்யும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

பூந்தமல்லி தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, கிட்டத்தட்ட மூன்றாண்டுகள் ஆகின்றன. அங்கு கழிவுநீரெல்லாம் குளங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆவன செய்யவேண்டுமென்று அங்குள்ள மக்கள் தினந்தோறும் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதனை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று பணிவோடு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை தொடர்பாக உடனடியாக துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*